

கழகத்தின் பெருமைமிகு இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை மேலும் வலிமையாக்கிட தொடர் ஆய்வுகளைச் செய்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விருதுநகர் வடக்கு மற்றும் சிவகாசி மாநகர மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை நேற்று முன்தினம் சந்தித்து அவர்களின் பணிகளை ஆய்வு செய்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் இளைஞரணி பொறுப்புக்கு வந்த அவர்கள், கலைஞர் நூற்றாண்டை மக்கள் பயனுள்ள வகையில் கொண்டாடிய விதம் குறித்து கேட்டறிந்தார். மேலும், இல்லந்தோறும் இளைஞரணி – கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடு – சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகத்தைத் திறப்பது – இளைஞரணி மாநில மாநாட்டுக்கு பங்களிப்பு செய்தது – கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுவது பற்றி உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் விரிவாக எடுத்துக் கூறினர். வருகை தந்திருந்த அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் மினிட் புத்தகம் – புகைப்படத் தொகுப்பு உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு, அவர்களின் பணிகளை வாழ்த்தி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையொப்பமிட்டார்.



இளைஞர்களின் கொள்கைக் கோட்டையாகத் திகழும் இளைஞர் அணியின் பணிகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில், தொடர் ஆய்வுகளை நடத்தி வரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விருதுநகர் தெற்கு மற்றும் சிவகங்கை மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். வருகை தந்திருந்த அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை, தனித்தனியாக சந்தித்து அவரவர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இளைஞரணி பணிகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார். தலைமைக்கழகம் வழங்கும் பணிகள் – இளைஞரணி சார்பிலான பணிகள் போன்றவற்றை களத்தில் செயலாக்குவது – நீட் விலக்குப் போராட்டங்கள் – நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலுக்கு பங்களிப்புச் செய்தது – கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் திறந்தது – இளைஞரணி மாநில மாநாட்டின் வெற்றிக்கு உழைத்தது – கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடு – இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பு போன்றவற்றைக் குறித்து கேள்விகளை எழுப்பி, ஆலோசனைகளை வழங்கினார். தங்களுடைய பணிக்கு சாட்சியாக அவர்கள், கொண்டு வந்திருந்த மினிட் புத்தகம் – புகைப்படத் தொகுப்பு – செய்திக்குறிப்பு போன்றவற்றை ஆய்வு செய்து வாழ்த்தினார்.




